முறியும் சிறகுகள் முதல் எழும் குரல்கள் வரை: அம்பை சிறுகதைகளில் பெண் விடுதலைச் சிந்தனை

ம. பாத்திமா ரெக்ஸ்
பதிவு எண்: 241112801026
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக்கழகம்
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை

முனைவர் சு. ரவி ஜேசு ராஜ்
தமிழ்த்துறை, பாளையங்கோட்டை
உதவிப்பேராசிரியர், தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)

முன்னுரை

இலக்கியம் இன்றைய சமகால சமகாலச் சிந்தனையைப் பிரதிபலிப்பதுடன், தன்னுள் ஏதேனும் ஒரு செய்தியை உள்ளடக்கமாகக் கொண்டிருத்தல் அவசியமாகிறது. கடந்து சென்ற நூற்றாண்டு பெண்கள் பேசத் துவங்கி இக்காலஇலக்கியத்திலும் பெண்களின் குரல்வலுவாக ஒலிக்கத் துவங்கியுள்ளது. மனிதன் விஞ்ஞானத்தின் அதிகபட்ச எல்லைகளை எட்டியபின்பும், தந்தை வழிச் சமுதாயம் பெண்ணை அடிமையாகவே எண்ணுவது ஏன்? என்ற கேள்வி பெண்ணியலாளர்களால் முன் வைக்கப்படுகிறது.

இந்நூற்றாண்டின் தமிழ்ப் பெண் எழுத்தாளர் வரிசையில் தனக்கென தனி இடத்தைப் பெற்றவர்(சி. எஸ் லட்சுமி) அம்பை மனதில் பட்டதைத் துணிந்து சொல்லும் துணிச்சல் மிக்கவர். சமூக அக்கறை கொண்டவர். தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் பெண் அனுபவத்தை பெண்ணிய பார்வையில் பதிவு செய்த முக்கிய எழுத்தாளர்களில் ஒருவர் அம்பை. அவரது கதைகள் பெண்கள் எதிர்கொள்ளும் குடும்ப, சமூக மற்றும் உளவியல் சிக்கல்களை ஆழமாக வெளிப்படுத்துகின்றன.

அவரது சிறகுகள் முறியும் என்ற சிறுகதை, பெண்ணிய அவலங்களை சசிறப்பான முறையில் எடுத்துக்காட்டும் முக்கியமான படைப்பாகும். சிறகுகள் என்பது சுதந்திரத்தையும் கனவுகளையும் குறிக்க, அவை முறியும் என்பது பெண்ணின் ஆசைகள் மற்றும் சுயநினைவு சமூகக் கட்டுப்பாடுகளால் ஒடுக்கப்படுவதை உணர்த்துகிறது இக்கதையில், கல்வியறிவு மற்றும் திறமை கொண்ட பெண் ஒருவர் திருமணம் மற்றும் குடும்பப் பொறுப்புகளின் காரணமாக தனது தனித்துவத்தை இழக்க நேரிடும் நிலை சித்தரிக்கப்படுகிறது. பெண்ணின் விருப்பங்கள், எண்ணங்கள், கனவுகள் ஆகியவை மதிக்கப்படாமல் மௌனப்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் ஆணாதிக்கச் சமூகத்தின் நுட்பமான கட்டுப்பாடுகள் வெளிப்படுகின்றன.

அதே நேரத்தில், கதாநாயகியின் உள்ளார்ந்த எதிர்ப்பு உணர்வும் சுய அடையாளத் தேடலும் கதையின் முக்கிய அம்சமாக அமைகின்றன. எனவே, சிறகுகள் முறியும் கதை பெண்ணிய அவலங்களையும், அவற்றை உணர்ந்து எதிர்கொள்ளும் பெண் மனநிலையையும் வெளிப்படுத்தும் களமாக இருப்பதை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

பெண்ணியம் விளக்கம்

அடிமைப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உருவானதே பெண்ணியம் ஷஷகுடும்பத்திலும் வேலைசெய்யுமிடத்திலும் பெண்கள் தாழ்த்தப்படுவதும், சுரண்டப்படுவதுமாக உள்ளனர் இவற்றைப்பற்றிய உணர்வும் இச்சூழலை மாற்றவேண்டி பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுநிலையுடைய செயல்பாடுகளுமே பெண்ணியம்"[1]

என்று கமலா பாசினும்,நிசாத் செய்யது கானும் கூறுகின்றனர். ஆக்ஸ்போர்டு அகராதி பெண்ணியம்

என்ற சொல்லுக்கு

"பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது"[2]

என்றபொருளைத் தந்துள்ளது.

"பெண்ணியம் என்பது பெண்களின் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலக அளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தினை ஏற்படுத்த முடியும்."[3]

என்கிறார் சார்லட் பஞ்சு

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் விதைக்கப் பட்டு இருபதாம் நூற்றாண்டில் காலூன்றி, இந்த நூற்றாண்டில் முளைவிட்டுப் பெண்ணியம் வளர்ந்து கொண்டிருக்கின்றது.

பெண்மொழி

குடும்பம் என்பது நிலவுடைமைக் கருத்தாக்கத்தை குழந்தையிலிருந்தே ஆண் பெண் இருவருக்கும் ஊட்டும் நிறுவனத் தன்மை கொண்ட அமைப்பாகும். தந்தையின் அதிகாரத்தின் கீழ் குழந்தைகள் வளர்க்கப்படுவதும் ஆண் குழந்தை சர்வ சுதந்திரத்துடனும் பெண் குழந்தை பல்வேறு கட்டுத் தளைகளுடனும் வளர்க்கப்படுவதும் என அமைகிறது. சமூகமானது ஆண் பெண் இருவரும் பயன்படுத்தும் மொழிகளையும் கட்டுப்படுத்தி வைக்கிறது பேச வேண்டிய மொழிகள் ஆணின் அதிகாரத்துவ மொழியிலிருந்து வேறுபட்டு அமைகிறது. அடக்கப்பட்ட பெண்ணின் மொழியானது இலக்கியங்களில் வெளிப்படுகின்றன. கனவுகளும், இலக்கியமும் நனவிலியின் பாதிப்பினை உடையவை. அடக்கப்பட்ட விருப்பங்கள் அனைத்தும் படைப்பின் மூலமாகவும் கனவின் மூலமாகவும் நிறைவேறும் இயல்புடையவை. "பெண் தன்னுடைய ஆழ்மன ஓட்டங்களை சின்னச் சின்ன கனவுகளை நடைமுறை வாழ்க்கையை உள்ளது உள்ளபடி சொல்லிப் போகும் மொழியே பெண்மொழி மற்றும் அது அவளுடைய மனதின் மொழி"[4] என்ற கூற்றானது பெண் மொழி இயங்கும் முறையைக் கூறுவதாக அமைகிறது. பெண்கள் பண்பாடென்னும் போர்வைக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் எனவே எளிதாக வார்த்தைகளை வெளிப்படுத்த முடியாது. அவர்களுக்கு சமூகம் மிகுதியான கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது. அவற்றை வெளிப்படுத்தும் விதமாகவே கலைகளில் பெண்கள் நிகழ்த்தும் செயல்கள் அமைகின்றன. கவிதையில், சிறுகதையில் புதினத்தில் பெண்மொழி ஆணின் அதிகாரத்துவத்தை எதிர்த்து அமையக் கூடும். "அமுக்கப்பட்ட நனவிலியால் பெண்ணின் ஆளுமையும் அமுக்கப்படுகிறது பெண்ணின் ஆளுமை என்பது ஆணிய ஆண் ஆதிக்கப் பண்பாட்டின் வெளிப்பாடாக இருப்பதால் ஆணாதிக்கக் கருத்துருவத்தை உள்முகமாக ஏற்றிருக்கிறது"[5] என்ற கூற்றினால் பெண் ஆளுமை முடக்கப்பட்டு நனவிலியில் சேகரமாவதும் அவை புற உலகில் வெளிப்படுத்தப்படாமல் படைப்புகளில் வெளிப்படுத்தப்படுவதாக அமைவதும் விளங்குகிறது.

பெண் என்பவள் சமுதாயத்தில் நிலவுடைமைப் பண்புகளை ஏற்று நடக்கிறாள். குடும்ப அமைப்பில் தனக்கான பணியினைச் செய்வதற்கு நியமிக்கப்பட்டவளாகவே கருதப்படுகிறாள். தனக்கான சுதந்திரத்தை இழந்தவளாகவே ஒரு மூலையில் முடக்கப்படும் தன்னிலையாக இருக்கிறாள். படைப்பிலும் தன் மொழியை எளிதாகப் பயன்படுத்தி விட முடியாதவளாகப் பெண் இருக்கிறாள் "பெண்களின் எழுத்து மட்டுமல்ல ஒவ்வொரு சொல்லும் அசைவும் கண்காணிக்கப்படுகிறது. எழுதும் பெண்களின் மீது குடும்பம் சாதி, மதக் கட்டுப்பாடுகள் பண்பாட்டுத் தணிக்கைகள் என்பவை தொடர்ந்து சுவிந்தபடியே உள்ளன. அந்த அழுத்தங்களுக்கு எதிரான போராட்டம் மிகக் கடுமையானது"[6] என்ற கூற்றினால் பெண்களுக்கு சமூகத்தில் உள்ள அழுத்தங்களை அறிந்து கொள்ளலாம் குடும்ப அமைப்பில் பெண்கள் தமக்கான இருப்பை சாத்தியப்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடாகவே சமையலறை காணப்படுகிறது. குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் உரிய உணவுப் பதார்த்தங்களைத் தம் வாழ்நாள் முழுவதும் சமைத்துக் கொண்டே இருக்கிறாள். அவளது மொழி ஈனமாக முனகுதலாகவே உள்ளது என்பதைத் தம் சிறுகதையில் வெளிப்படுத்துகிறார் அம்பை.

கல்வி

கல்வி என்பது ஆண் - பெண் இருபாலருக்கும் பொதுவானதாகும். பெண்கல்விகற்க பெற்றோர்களே

மறுக்கின்றனர். காரணம் பெண் படித்து வேலைக்குச் செல்வது திருமணம் ஆகும் வரைத்தான். ஷஅடுப்புதும் பெண்களுக்கு படிப்பெதற்கு' என்னும் மனநிலையோடு இல்லறங்கள் செயல்படுகின்றன. கல்லூரி வரை சென்று பெண்கள் படித்தாலும், அதனைத் தாண்டி கல்விகற்பதற்குஎந்தகுடும்பமும்ஒத்துழைப்பதில்லை. பெண்கள் முனைவர் பட்டம் பெறுவது என்பது குதிரைக் கொம்பாகி வருகிறது. பட்டறிவினைவிட கல்வி அறிவே அறிவியல் புர்வமாகவும், ஆக்கப் புர்வமாகவும் சிந்திக்கும் ஆற்றலுடையது. அத்தகைய கல்வியினை பெண்களுக்கு கொடுக்க மறுக்கும் பொழுது அறியாமை என்னும் இருள் விலகாமல் இருக்கிறது. ஆண்களுக்கு நிகரான கல்வியினைப் பெண்களுக்கும் அளிக்க வேண்டும்.பெண்களின் கல்வி வெவ்வேறு வழிகளில் பயன்படுகிறது. தொடக்கக் காலங்களில் பெண்களின் திருமண வயதை உயர்ந்த அது முக்கியமான வழியாகக் கருதப்பட்டது.

விதவைகளுக்கு மனவலிமையையும், பொருளாதார சுதந்திரத்தையும் அளிக்கக் கல்வி தேவை. சமுகத்தில் உயர்நிலையில் இருந்தவர்களின் குடும்பப் பெண்கள் ஆங்கிலேயர்களின் பழக்க வழக்கங்களை அறிந்துக் கொள்ளவும், அவர்கள் உடன் பழகவும் கல்வி அவசியம் என உணர்ந்தனர். பெண்களின் கல்வி அவசியத்தை ஆசிரியர் ஷதிரிசங்கு' என்னும் கதையில் கூறுகையில்,

> **"அஞ்சாவை ஒரு பேப்பர் படிக்கச் சொல்லலாம். புரொபஸர் வேடிக்கையாகவே சொன்னார். ஆனால் அவள் தாக்கப்பட்டாள், அவளும் சிரித்தாள் ஒப்புக்கு. அன்றும் ஒரு கருத்தரங்கு வெளிநாட்டிலிருந்து ஒருவர் வந்து பேசுவார். அன்று 45கருத்தரங்குகளில் பேச வேண்டும் என்று அவள் எண்ணினாள். அவர் பேசி முடித்ததும் கணீரென்ற குரலில் புரொபஸர் உங்களுடன் எனக்கு உடப்பாடில்லை"[7]**

என்றாள்.

அஞ்சான் படித்த பெண். அதே நேரத்தில் பயந்த குணம் உடையவள். அவள் ஒரு நேர்முகத் தேர்வுக்குச் சென்றாள். அங்கு அவள் பதில் அளித்த பின் ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டாள். அங்கு இருந்த பேராசிரியர் அவளின் பயந்த குணத்தை வேடிக்கையாகச் சொன்னார். மாறுநாள் கருத்தரங்கில் வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் பேசினார். அதைக் கேட்டு பின் அவள் தன் பயந்த குணத்தை தவிர்த்து தன்னுடைய கணீரென்ற குரலில் அவரிடம் கேள்வி கேட்டாள்.

இவ்வாறு பெண் கல்வி கற்றால் எந்த இடத்திலும் எவரிடமும் பயம் இன்றிப் பேசமுடியும் என்பதை உண்மையாக்கினாள். பெண்கள்கல்வியினைகற்பதாலே பிறதுறைகளில் முன்னேற்றம் அடைய எளிமையாக இருக்கும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. பெண்களின் அறியாமையினை அகற்ற கல்வி பெண்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது.

மறுமண சுதந்திரம்

பெண்களைச் சிறிய வயதிலே திருமணம் செய்து கொடுக்கின்றனர். அகவை வித்தியாசம் பாரால் ஐம்பது வயதுடைய ஆண் ஒருவன் மூன்றாம் தாரமாக பதிநான்கு வயதினையுடைய பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். இதன் விளைவாக குறுகிய ஆண்டுகளில் ஆண் அசுவை மகிர்வினை காரணமாக இறந்து விடுகிறான். பெண் இதன் காரணமாக. பெண்கள் சமுகத்தோடு ஒன்றிணைந்து வாழவும் முடியாமல் வாழ்வினை விட்டுவிட்டு சாகவும் முடியாமல் கடலில் ஆள் இல்லாத தோணி போலத் தத்தளித்துக் கொண்டு வாழ்க்கையினை ஒட்டிச் செல்கின்றனர். இத்தகைய மனம் ஆழ்நிலையில் மறுமணம் என்பது அவசியமான ஒன்றாக இருக்கின்றது.

கணவனை இழந்த பெண்கள் வாழத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர். அணிகலன்களை அணியக்கூடாது அவர்கள் உயிர் வாழத் தேவையான அளவுதான் உணவு உட்கொள்ள வேண்டும். பலவகையானஉணவுவகைகளைபெண்கள்உண்பது தடைசெய்யப்பட்டது. அவர்கள் அமங்கலச் சின்னங்களாகக் கருதப்பட்டு விலக்கி வைக்கப்பட்டனர். அவர்கள் வாழ்வின் இன்பங்கள் அனைத்தையும் துறந்து மற்றவர்களின் ஆதரவில் பிழைப்பு நடத்த வேண்டிய நிலைமைக்கு உள்ளாயினர்.

"சூரியன்" என்னும் கதையில் விதவைப் பெண்படும் துயரங்களை ஆசிரியர் இவ்வாறு பதிவு செய்கிறார்.

"நாம் வெளியே போகிறோம். மகனே தோட்டத்தில் ஓடவா? ஆம் தோட்டங்கள் இருந்தால் தனியாகப் போனால் ஆபத்து நேரிடலாம் என்று தான் அவனையும் கூட்டிப் போவதாக அம்மா பின்பு சொன்னார்"[8]

இவ்வாறு தன் கணவனை இழந்து தனியாக வாழும் பெண். தனியாக வெளியே செல்வதற்குக்கூட தன்னுடன் மகன் அல்லது உடன்பிறந்தவர்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்று விதவைப் பெண்களின் துயரங்களைக் அறிய முடிகிறது.

விதவைப் பெண்களின் நிலை மாற வேண்டுமென்றால் விதவைப் பெண்ணிற்கு மறுமணம் செய்து கொள்வதற்கு சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும்.

பெண்ணை ஆணுக்குச் சமமாகப் பாவித்தல்

ஆண் பெண்ணை தன்னுடைய தேவைகளைப் புர்த்தி செய்வதற்காக மட்டுமே பயன்படுத்திக் கொள்கிறான். குடும்பத்தில் பெண் என்பவள் ஊதியம் இல்லாத வேலைக்காரியாகச் செயல்படுகிறாள். பெண் ஆணிடம் நேருக்கு நேராக நின்று பேச முடியாத நிலையில் தான் இருக்கின்றாள். "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்ற கொள்ளையைத் தான் கடைப்பிடிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர். பெண்ணின் உணர்வையும் உரிமையையும் ஆண்கள் புரிந்து செயல்பட்டால் தான் இல்லறம் நல்லறமாகும்.

ஓர் ஆணிற்கு முழு சுதந்திரத்தை இச்சமூகம் எவ்வாறு கொடுக்கின்றதோ அதனைப் போல் பெண்ணிற்கும் கொடுக்க வேண்டும். ஆண் ஊதியத்திற்காக வெளியில் சென்று வேலை செய்வது போல பெண்ணும் வெளியே சென்று வேலை செய்வதற்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். ஆணை உயர்வாக, கருதுவதனைப் போல பெண்ணிற்கும் மதிப்பளித்தல் வேண்டும். என்பதை.

பெண்ணின் சுதந்தீரத்தைப் போற்றுதல்

பெண்ணுக்கு முதலில் பெற்றோர்கள் சுதந்திரத்தக் கொடுக்க வேண்டும். கல்வியினை பயிலுவதற்கும், தொழிற்சாலைகளுக்கோஅல்லதுஅலுவலகங்களுக்கோ சென்று வேலை செய்வதற்கு உரிமையினைக் கொடுக்க வேண்டும். ஓர் ஆண் குழந்தைக்கு எத்தகைய சுதந்திரம் கொடுக்கப்படுகின்றதோ அதனைப் போல பெண் குழந்தையையும் சுதந்திரமான முறையில் வளர்க்க வேண்டும். ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் விலகுவதுடன் பெண்கள் முன்னேற்றம் அடைவார்கள். இப்போது புதிய கட்டுப்பாடுகள் பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது புனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா?

"சிறகுகள் முரியும்" என்னும் கதையில் சாயா என்னும் பெண்ணிற்குத் தன் தங்கையைப் பெண் பார்க்க வருவதாக கடிதம் வந்தது. அதை பாஸ்கரன் சாயாவிடம் கொடுத்த உடன் சாயா தன் தாய் வீட்டிற்குப் போக வேண்டும் எனக் கேட்ட அதற்கு அவன் மறுத்து விட்டான். முடிவு எடுக்கும் உரிமை பாஸ்கரனிடம் இருந்ததால் சாயாவைப் போக வேண்டாம் என்று கூறினான்.

"விஷயம் என்ன நீயே படியேன் உன் தங்கையைப் பெண் பார்க்க வராளாம். உகிஜமாவா தாங்கோ லெட்டரை?கடிதத்தைப் பார்த்து முடிந்ததும் என்ன? என்றாள், பாஸ்கரனிடம் எனக்கென்ன தெரியும்? ஆயிரம் பேர் பெண் பார்க்க வருவா ஒவ்வொரு தடவையும் நீ போக முடியுமா?'[10]

என்றுகணவனாகியபாஸ்கரன்மறுத்துவிட்டான். ஆண் குடும்பத்தில் முடிவு எடுப்பதைப் போல் பெண்ணுக்கும் தன் காரியங்களில் முடிவெடுக்கும் உரிமை அளித்தல் வேண்டும்.

இத்தகைய நிலையில் இருந்து மாறுபட்டு பெண்களின் சுதந்திரத்திற்கு வழிவகை செய்ய வேண்டும். சுயமாக முடிவினை எடுக்கவும், குடும்பத்தின் தலைமைப் பொறுப்பைப் பெண்கள் ஏற்றுச் செயல்படவும் ஆண்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறுகிறார்.

தனித் திறமைக்கு மதிப்பளித்தல்

பெண்களின் திறமைகளை வெளிக்கொணர வழிமுறைகளை முதலில் மேற்கொள்ள வேண்டும். கைத்தொழிலில் ஈடுபாடு உள்ளதா அல்லது தொழிற் சாலையில் ஆர்வம் உள்ளதா என்பதைத் தெரிந்து கொண்டு தொழிலைத் தேர்வு செய்து அவர்களை அதில் முழுமுனைப்புடன் செயல்பட வைத்தல் வேண்டும். "ஒருநாள் மாலை திருப்புகழ் ஒன்றை அதிகப்படியாக வாசித்துக் கொண்டிருந்த வேளையில் அப்பா வந்து விட்டாராம். அம்மா பாட்டை முழுவதும் பாடி முடித்து விட்டுத்தான் எழுந்தாராம்"[11]

கிழவர் போனவுடன் அப்பா அம்மாவை அழைத்து நீ யாரைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கே? என்றாராம், ஏன் உங்களைத்தான் என்றாளாம். எதற்காக சாவர?' அவ்வாறு கேட்டார் என்று தெரியாமல் அம்மா விழித்தாள்.

புமாவின் அம்மா நன்கு வீணை வாசிக்கத் தெரிந்தவள். ஒரு நாள் அவள் வீணை வாசிப்பதை பக்கத்து வீட்டில் உள்ள கிழவன் கேட்டு கொண்டு இருப்பதை அறிந்து அவளின் கணவன் அவளிடம் நீ எனக்கு மட்டும் வாசிச்சா போதும் என்றும் வேற எவருக்கும் வாசிக்கத் தேவையில்லை என்றும் கூறினான். இத்தகைய பெண்களின் தனித்திறமைகளைப் பாராட்டி மாற்றத்தை ஆண்கள்கொண்டுவரவேண்டும் பெண்களின் நிலையில் இருந்து எண்ணிப் பார்த்து அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். பெண்ணின் தனித் திறமைகளை வெளிக்கொண்டு வருவதன் வாயிலாக இல்லறப் பெண்ணிய சிக்கலில் இருந்து விடுதலைப்பெற வழி பிறக்கும்.

மரபுகளைக் கட்டுடைத்தல்

மரபுகளைக் காரணம் காட்டி பெண்களைத் தொடர்ந்து அடிமைப்படுத்தி வருகின்றனர். கூட்டு குடும்பம் என்ற பெயரில் தனிப்பட்ட பெண்களின் சுதந்திரத்தைப் பறிக்கின்றனர். கணவனே கண் கண்ட தெய்வம்" என்னும் வழக்கத்தைப் புறம் தள்ளுதல் வேண்டும். பெரியோர்களின் வாக்கையே வேதவாக்ககாகக் கருதுதலை மாற்றுதல் வேண்டும். நிச்சயக்கப்பட்ட திருமணமே என்றும் சிறந்தது அது மட்டுடே வாழ்க்கையின் இன்பத்தினைப் பெற்றுத் தரும். பெண்கள் வேலைக்குச் செல்ல தடை விதிக்கப்படுவதை தகர்த்தெரிதல் வேண்டும். எந்தத் துறையில் ஆர்வம் இருக்கின்றதோ அதனைப் பற்றிய செய்தியினைக் கூறி ஊக்கப்படுத்துல் வேண்டும். பெண்கள் பணிபுரிவதை ஆண்கள் மறுத்தல் கூடாது. பெண்களின் சுய உழைப்பில் வந்த வருமானத்தை முழுவதும் குடும்பத்திற்காக மட்டும் செலவு செய்யாமல் அவளுடைய சுய விருப்பத்தின் படி செலவு செய்ய அனுமதிக்க வேண்டும். திருமணத்திற்கு பின் கணவன் இறப்பின் மறுமணம் செய்வதனைத் தடைச் செய்யக்கூடாது பெண்கள் மட்டுமே சமையல் செய்வதனை விடுத்து ஆண்களும் பங்கேற்றல் வேண்டும்.

"இனிமே பாத்ரூமிலேயே ட்ரஸ் பண்ணிக்கனும் தெரிஞ்சுதா, என்கிறார். அப்பா அப்பா போன பிறகு கதவைச் சாத்துகிறேன். ஷிம்மீசைக் கழற்றிப் போடுகிறேன். கறுப்பு உடம்பைக் கண்ணாடி பிரதிபலிக்கிறது. முகத்தைவிடச் சற்றே நிறம் மட்டமான தோள்கள். கைகள், மார்பு, இடை, மென்மையான துடைகளின் மேல் கை ஒடுகிறது. நான் அதே பெண் இல்லையா? அம்மா என்ன சொல்லப்போகிறாள்? ஸ்கூல்லே ஏன் வரல்லென்று கேட்டா என்ன டீ சொல்வே? ஒண்ணும் சொல்ல வேண்டாம் சும்மா இரு"[12]

ஒரு பெண் புப்பெந்திய உடன் அவளை அவள் அப்பா ஆடைகளை இனி பாத்ரூமிலேயே மாற்ற வேண்டும் என்றும், ஆண்களைப் பார்க்கக் கூடாது என்றும், பள்ளியில் அவள் புப்பெய்திய செய்தியைச் சொல்லக்கூடாது என்று கூறுவது ஷஅம்மா ஒரு கொலை செய்தாள்" என்னும் கதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு பெண் புப்பெய்திய பின்னர் அவளை ஒரு அடிமை போல நடத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். அவளின் உணர்வுகளுக்கு முக்கியத்துவத்தை கொடுப்பதைவிடவும்அறிவுப்புர்வமானசிந்தனைகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும். பெண்களுக்கான கட்டுப்பாடுகள் என்ற பெயரில் கொடுக்கப்படும் அடக்குமுறைகளைத் தகர்த்தெரிதல் வேண்டும்.

பெண்களுக்கு கற்புக் கோட்பாடு கட்டாயப்படுத்தப்படுவது போல், ஆணுகளுக்கும் கட்டாயப்படுத்தப்பட வேண்டும். ஆண்கள் வெளியில் சென்று வேலை முடிந்து திரும்பிய

பின்னர் பெண்களுக்கு வீட்டு வேலைகளில் உதவிடவேண்டும். பெண்களுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகளில் தளர்வு¨ வேண்டும்.

ஆண்களுக்குப் பெண்கள் சமம் என்ற கொள்கையினை ஒரு மனதாகப் போற்றுதல் வேண்டும். காலங்காலமாக பெண் திருமணமாகி ஆண் வீட்டிற்கு செல்வதனை மாற்றி அமைக்க வேண்டும். இத்தகைய மரபு முறைகளை தகர்தெறிவதன் வாயிலாக இல்லறப் பெண்ணியத்தினை வெற்றிப் பெறச் செய்யலாம்.

சொத்துரிமை

காலங் காலமாக குடும்பச் சொத்து ஆண் வாரிசு களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு மாறாகப் பெண்களுக்குச் சொத்தில் பங்கு வழங்கப்பட வேண்டும். ஒரு பெண் தான் பிறந்த வீட்டில் வசதியான வாழ்க்கை மேற்கொண்டிருக்கும் பொழுது தன்னுடைய வசதிக்கு குறைவான ஒருவரைத் திருமணம் செய்து வாழும் பொழுது இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலைத்தான் இருக்கின்றது. இத்தகைய நிலை மாற வேண்டும் என்றால் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்குவதன் வாயிலாக சமுகத்தில் மதிக்கத்தக்க நிலைக்கு உயர்த்தப்படுகின்றனர். சொத்துரிமை கொடுப்பதன் மூலம் தங்களுடைய தேவையினைத் தானே புர்த்தி செய்வதற்கு வழி பிறக்கிறது.

"அறைக்குள்ளிருந்தவன் என்னும் கதையில்' வரும் ஒரு ஆண் தன்னுடைய சொத்துக்கள் எல்லாத்தையும் அழித்துவிட்டுத் தானும் இறந்து விட்டான். இதனால் அந்தக் குடும்பமே வறுமை நிலையில் இருக்கின்றது. அந்தக் குடும்பத்தில அவன் மீதியாக வைத்தது கடன் மட்டும்தான்.

"அம்மா அவளிடம் அப்பா சொத்தையும் அழித்து அவரும் போயாச்சு. அவர் வைத்தியத்துக்கான கடன் தலைக்கு மேலே இருக்கு"[14]

ஆண்களுக்கு பெண்கள்சமம்என்ற கொள்கையினை ஒரு மனதாகப் பேற்றுதல் வேண்டும்.

அவள்சொத்து கிடைத்தால் அவன் தன் கணவன் இறந்த பிறகு கஷ்டப்படத் தேவையில்லை. அதை வைத்து மகிழ்ச்சியாக வாழலாம். இத்தகைய நிலை ஏற்பட வேண்டும் ஏனென்றால் பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும். சொத்துரிமை பெண்களின் கைவசம் இருப்பதன்வாயிலாக குடும்பத்தின் வளர்ச்சிக்காக சரியான திட்டமிடுதலுக்கு வழிவகை செய்கின்றது. ஆண்கள் தங்களுடைய சொத்தினை குடித்தே முழுவதமாக அழிக்கின்றனர். இந்நிலை மாற பெண்களுக்கு சொத்துரிமை வழங்'கப்பட வேண்டும்.

பணி பகிர்வு

பெண்கள் மட்டுமே இல்லறங்களில் ஊதியம் இல்லாத உழைப்பாளிகளாக செயல்படுகின்றனர். பெண்கள் மட்டுமே வீட்டு வேலைகளைச் செய்கின்றனர் ஆண்கள் துணி துவைத்தல், சமையல் போன்றவற்றை அறுவருப்பாகவும் தங்களுடைய தன்மானத்திற்கு இழுக்கு எனவும் என்னுகின்றனர். பெண்கள் மட்டுமே பாத்திரத்தை கழுவ வேண்டும். ஆண் கழுவினால் ஆண் குலமே அவமானமாகக் கருதுகின்றனர்' பெண்ணே எல்லா வேலையினைச் செய்யும் இயந்திரமாக ஆண்கள் ஆக்குகின்றனர்.

பெண்கள் இல்லற வேலையினைச் செய்வது போல் ஆண்களும் வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்ய வேண்டும். ஒருநாள் பெண் வேலை செய்தால் மறுநாள் ஆண் வேலை செய்ய வேண்டும். ஆண்கள் வெளியில் சென்ற வேலை செய்வதால் பெண்கள் மட்டும் தான் வேலையை செய்ய வேண்டிய நிலைக்கு தன்னப்படுகின்றனர். மாறாக வெளி வேலைக்குச் சென்றுவிட்டு ஆண்கள் வீட்டு வேலைகளை ஆண்கள். மனதார ஏற்கவேண்டும். ஆண்கள் இவ்வாறு செயல்பட்டால் பெண்கள் அவறங்களில் துயரப்படும் நிலையை மாற்றி அமைக்க முடியும்.

குடும்ப வன்முறைகளைத் தவிர்த்தல்

குடும்பத்தில் பெண்களுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வன்முறைகளும் ஆண்களின் கொடுமைகளும் தொடர் நிகழ்வுகளாகின்றன. மேலும் கணவனைச் சார்ந்தோராகிய குடும்ப உறுப்பினர்களின் இழிவான பேச்சுக்களாலும், அவர்களால் ஏற்படும் தொல்லைகளாலும், பெண்கள் மனதளவில் பாதிக்கப்படுகின்றனர். திருமணமும் குடும்பமும் ஆணிற்கு பெண்ணை உடைமைப் பொருளாக்கி ஆளக்கூடிய அதிகாரத்தை வழங்குகின்றன. திருமண உறவிலும், சமுக வாழ்விலும் இதுவே அடித்தளமாகின்றது.

"எத்தனை நாள்தான் பதுங்குவீர்கள் என்றாள். என்ன நடக்கும் என்று நான் கற்பனை செய்யும் முன் ராம் ஷர்மாவின் வேலைக்காரன் அம்மாவின் மீது பாய்ந்தான். நிலாவெளியில் என்ன நடந்தது என்றுபுரியவில்லை. மளக் கென்று அம்மா சரிந்து வீழ்ந்தாள். கறுப்புப் போர்வை விலகியது. கழுத்திலெல்லாம் ரத்தம் அவள் நீண்ட கூந்தலில் சிவப்புப் பரவியது. அம்மா! அம்மா! என்று கூவ நினைத்தேன். ஓசையே கிளம்பவில்லை. அப்பாவும் மற்றவர்களும் கீழே கிடந்தவளைப் பார்த்தவாறு நின்றனர். கலவரத்துடன்" ?[14]

என்பதனை ஆசிரியர் 'சுவல்லூறுகள்சுசு என்ற கதையில் கூறுகிறார்.

கணவன் ஊரில் பலரின் தானியங்களைப் பதுக்கி வைத்து இருப்பதை பார்த்த அவன் மனைவி அதை அவர்களிடம் எடுத்துக் கொடுக்கும் போது அதைப் பார்த்த அவள் கணவன் அவளை வெட்டி விட்டான். அதைப் பார்த்த அவன் குழந்தை பெண்களின் நிலை இதுதான் என்று எண்ணினாள். இவ்வாறு குடும்பத்தில் கணவன் மனைவி இடையே வன்முறைகள் ஏற்படும்

பாலியல் உந்துதல்களின் காரணமாகப் பாலியல் வன்முறை தவிர்த்தல்

தந்தை வழிச் சமூக அதிகார உள்ளமைவு பாலியல் பாகுபாட்டின் வழி வெளியாகும் பாலியல் வினைகளாகக் கருதப்படுகிறது. பாலியல் செயலில் தான் பெண் இரண்டாந்தரக் குடிநிலைக்குத் தள்ளப்படுகிறாள். பெண்ணிற்கு அதிகாரமின்மையைப் பாலியல் பகுபாட்டின் வழி நினைவுறுத்தி பெண்ணை ஆணின் சார்புப் பொருளாக்கி வருகின்றது. பெண்ணுடைய அறிவு, ஆற்றல், ஆளுமை யாவும் கற்பு என்ற ஒழுக்க வரையறையில் முடக்கி, ஆவளுக்கு எல்லாம் ஆண் மூலமே நிறைவேற்றப்படுகிறது. சமுதாயத்தில் பெண் சயமாகச் சிந்தித்து தன் உடல்நிலை சுதந்திரம் பாதிக்கபடாத வகையில் தற்காலிகமாக தள்ளிப் போடலாம் என்ற அவளின் பேச்சு அவளின் மன உணர்விற்கு, ஆரோக்கியமான சிந்தனைக்கு ஆணின் மன உணர்வுகள் விரிந்த தளத்தில் இடமளிப்பதில்லை என்பதே தெளிவாகின்றது. "திரிசங்கு" என்னும் கதையில் பாலியல் வன்முறை உள்ளது.

"இப்போ நான் உன்னை முத்தம் குடுத்தா என்ன செய்வே? ஒருமுறை ஒரு முக்கிய புத்தகம் எடுத்துக் கொள்ள ஞாயிற்றுக்கிழமை அவர் வரச்சொன்னார். அவர் அறை, லைப்ரரியின் மேல், வளைவுப் படிகளின் மூலம் ஏறி அடைய வேண்டியது. அவள் போனாள். புரொப்ஸர் புத்தகம் அலமாரியில் இருப்பதாகச் சொன்னார். அவள் அதைத் தேடும்போது அவர் கரங்கள் அவளை சுவரோடு அழுத்தின. ஒரு கணம் மயக்கமேஅடைவது போன்ற உணர்வில் தவித்துப்பின் திமிறிக்கொண்டு வளைவுப் படிகளில் கீழே ஓடினாள். புரொப்பஸரின் காலடி தொடர்ந்தது."[15]

அப்பாவயது உடைய பேராசிரியர் அஞ்சனாவிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்யும் போது அவள் சாதுரியமாகத் தப்பித்துக் கொள்கிறாள். பாலியல் பலாத்காரம் என்பது ஆணின் பலவீனமான உடல் ஆசையினால் உண்டாவதாகும். இத்தகைய பலவீனமான உடல் வன்முறையாகச் சமூகத்தில் தொடர்கின்றது. சமூக வன்முறையாகக் கட்டவிழ்த்திருக்கும் பண்பாட்டால் பாலியல் பலாத்காரம் நிகழும் போது அது சமூக வன்முறையாகக் கருதப்படுகின்றது.

பெண் ஆணிடம் அடங்கியிருக்க வேண்டும் என்ற பண்பாட்டுக் கட்டுமானத்திற்கு பெண்ணின் உடற் கவர்ச்சியும் அடங்குகிறது. பெண் உடலைப் பலாத்காரம் செய்யும் ஆண் அவனின் உடற்கூற்றமைப்பைக் காரணம் காட்டித் தப்பித்துக் கொள்வது ஆண் மேலாதிக்கப் பண்பாடாகிறது.

முடிவுரை

அம்பை சிறுகதைகள் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் பெண் அனுபவத்தை மையப்படுத்தி புதிய பெண்ணிய அரசியல் உணர்வை உருவாக்கியுள்ளன. அவரது கதைகளில் பெண் பாத்திரங்கள் ஆரம்பத்தில் சமூக மரபுகளால் கட்டுப்படுத்தப்பட்ட மௌன நிலையிலிருந்தாலும், பின்னர் கேள்வி எழுப்பும் எதிர்ப்புத் தன்மையை அடைகின்றன. இறுதியில், தனிப்பட்ட அனுபவங்களை அரசியல் விழிப்புணர்வாக மாற்றும் முழுமையான பெண்ணிய நிலையை அடைகின்றன. கல்வி, சொத்துரிமை, மறுமணம், பாலியல் சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகள் பெண்களின் சமூக முன்னேற்றத்திற்கு அவசியமானவை என்பதை

அவரது கதைகள் வலியுறுத்துகின்றன. இதனால் அம்பை சிறுகதைகள் தமிழ்ப் பெண்ணிய இலக்கியத்தின் பரிணாம வளர்ச்சியில் முக்கிய மைல்கல்லாகத் திகழ்கின்றன என்பதை இக்கட்டுரை வழி அறிய முடிகிறது.

அடிக்குறிப்பு

1. காவ்யா சண்முகசுந்தரம் தொ.ஆ பெண்ணியம் பக்-3
2. இரா. பிரேமா, பெண்ணியம் ப-11
3. ஆய்வுக்கோவை 2003 பக் -1465
4. காஞ்சனா- பெண்ணிய உளப் பகுப்பும் பெண் மொழியும்2013 பக்- 25
5. மல்லிகா- தமிழ் இலக்கியமும் பெண்ணியமும் 2015, பக்-35
6. மாலதி மைத்ரேயி 2014 வெட்ட வெளிச்சிறை பக். 46
7. அம்பை சிறகுகள் முறியும் பக் - 147,
8. மேலது பக்-14
9. மேலது பக்-109
10. மேலது பக்-94
11. மேலது பக்-109
12. மேலது பக்-120
13. மேலது பக்-126
14. மேலது பக்-79
15. மேலது பக்-140